தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஸு ஆடிமீ 11உ (26-7-'22.) | ப. 14.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால் சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாகள் சகல தினுசுகளும் தயாராக இருக்கிறது. அதன் விபர கேட்லாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

தமிழ் உலகு

(Tamil World)

ADVERTISEMENT RATES

(PER INSERTION)

Per	1 Page	Rs. 16
Per	½ Page	Rs. 9
Per	¼ Page	Rs. 5

Apply to

The Manager,
'THE TAMIL WORLD'
MYLAPORE.

தமிழ் உலகு

சந்தா விகிதங்கள்

(தபால் கூலி உள்பட)

வருஷம் 1-க்கு ரூபா 5.
வருஷம் ½-க்கு ரூபா 3.

மானேஜர்,
'தமிழ் உலகு'
மைலாப்பூர்.

பண்டித. கே. ஏ. வெங்கடாசல சாஸ்திரிகளின்

மதனானந்த மோதகம்

உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத இன்பம் தரும் தாதுவிருத்தி லேஹ்யம். இது ஜனனேந்திரிய சம்பந்தமான எல்லாப்பிணிகளையும் போக்கி வலுவைக் கொடுக்கும். விலை டின் 1-க்கு ரூ. 5. (வி. பி. தனியே)

மானேஜர்: ஆயுர்வேத மந்திரம், மைலாப்பூர், சென்னை.

தபால் கூலியுள்பட சந்தா
ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0
அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0
'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்
மைலாப்பூர், சென்னை

விஷய அடக்கம்.

வியாசங்கள்.
1. திரிசங்கு ஸ்வர்க்கம் 118
ஸர். அப்துர் ரஹீம்
2. ஓர் கொடையாளி 119
பார்லிமேண்டில் இந்தியாவைப்பற்றிய விவாதம்.
3. Mr. பென்ஸ்பூர் கண்டித்தல் 120
4. கர்னல் வெஜ்வுட் பிரசங்கம் 121
விவசாயம்.
5. விவசாய அபிவிருத்தி 124
ஓர் வக்கீல் மிராசுதார் எழுதியது
ஸாஹித்யம்.
6. புயற் காற்று 124
(ஸ்ரீமான் V. நாராயணய்யர், M. A., M. L., எழுதியது) மகாகவி டாக்டர் ரவீந்திர நாத் டாகூரின் 'ரெக்' என்னும் கதையின் மொழி பெயர்ப்பு.
'ஸையன்ஸ்.'
7. அணுக்களுள் மறைந்த அளவற்ற ஆற்றல் 126
(ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி அய்யர் B.A.B.L. எழுதியது)
ஹாஸ்யம்.
8. நரிகளின் மகாநாடு 127
(ஸ்ரீமான் 'ராமசந்திரர்' எழுதியது)

தமிழ் உலகு

துந்துபிஞு ஆடிமீ 11உ

திரிசங்கு ஸ்வர்க்கம்

ஸர். அப்துர் ரஹீம்.

1919ம் வருஷத்திய இந்தியா சீர்திருத்த சட்டப்படி, ராஜாங்க விஷயங்களில் இந்தியர்கள் முதன் முதலில் பொறுப்பை வகிக்கக் கற்றுக்கொள்வதற்காக, சில அதிகாரங்கள் மந்திரிகளான இந்தியர்களுக் களிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஒவ்வொரு மாகாணத்திலும் கவர்மெண்ட் நிர்வாக சபைகளில் இந்தியர்களும் மெம்பர்களாய் இருக்கிறார்கள். ஆகவே, 'கௌன்ஸில் மெம்பர்களாகவும்,' மந்திரிகளாகவும் இந்தியர்கள் பலர் இருந்து வருவதால், நமது இஷ்டப்படியே எல்லாம் நிறைவேறுவதில் எவ்விதத்தடைகளும் இல்லையென்று ஆங்கிலேயர்கள் எண்ணுகின்றார்கள். ஓர் ராஜ்யத்தில், ஒரு கவர்னரும் இரண்டு மெம்பர்களும் ஐரோப்பியர்களாய் இருக்க, ஐந்து இந்தியர்கள் முக்கிய மந்திரிகளாக உத்தியோகம் செய்துவரும் பொழுது, இன்னமும் நமக்கு என்ன குறைகள் இருக்கக்கூடுமோ வென பிரிடிஷ் அதிகாரிகள் சொல்வது வழக்கமாகிவிட்டது. உண்மையில், எப்பக்கத்திலும் சேராதவனொருவன் விஷயங்களெல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்து பார்ப்பானாகில், இந்தியர்களுக்கு இச்சீர்திருத்த சட்டத்தால் துன்பமே ஒழிய, வேறு எவ்வித சௌகரியங்களும் கிடைக்கவில்லையென்று ஒத்துக்கொள்ள வேண்டியதாகவே இருக்கும். இதைப்பற்றி சற்று விசாரிப்போம். இரண்டு கௌன்ஸில் மெம்பர்களும், மூன்று மந்திரிகளுமாகச் சேர்ந்து, ஐந்து இந்தியர்கள் ஒவ்வோர் கவர்மெண்டிலும், கவர்னருக்கடுத்தபடியில், மேல் அதிகாரிகளாக இருந்து வருகிறார்கள். ஆனாலுமென்ன? இவர்களுக்குக் கீழ்வேலை பார்த்துவரும் 'டிபார்ட்மெண்ட்' தலைவர்களெல்லோரும் பெரும்பாலும் ஆங்கிலேயர்களே. உதாரணமாக, கல்வி இலாகாவுக்கு எப்பொழுதும் உத்தியோக முறைமையில் (டைரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்) என்பவர்தான் தலைவராக இருந்து வருகின்றார். இங்கே ஒரு முக்கியமான அம்சத்தை நமது நேயர்கள் கவனிக்கவேண்டும். 'கௌன்ஸில் மெம்பர்கள்' ஐந்து வருஷத்திற்குப் பிறகும், மேலும் மந்திரிமார்கள் மூன்று வருஷத்திற்குப் பிறகும், தங்களுடைய பதவியிலிருந்து தாமாகவே விலகிவிடுவது அவசியமாகின்றது. ஆயின், டிபார்ட்மெண்ட் தலைவர்களோ இவர்களைப் போலல்லாமல், முழுவதும் காலக்கிரமத்திலேயே, கவர்மெண்ட் ஸெர்விஸில் விதிக்கப்பட்டுள்ள வயதென்ற நிர்ப்பந்தத்திற்குட்பட்டவர்களாய், தமது உத்தியோகங்களைத் துறக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ராஜ்யத்தில் கவர்மெண்டார் என்ன செய்யவேண்டுமென்பதைத் தான் 'கௌன்ஸில் மெம்பர்களும்,' மந்திரிகளான இந்தியர்களும் உத்தரவிட்டுவருவது அவர்களின் பிரதானமான தர்மமாகும். கேவலம் 'டிபார்ட்மெண்ட்' தலைவர்கள் அக்கட்டளைகளைச் செய்து முடிக்க வேண்டும். இச்சென்னை ராஜதானியில், Hon. பத்ரோ (Patro) கல்வி இலாகா மந்திரி யாயிருக்கின்றார். இவருக்குக்கீழ், Hon. லிட்லேஸ் டைரெக்டர் வேலைபார்த்துவரும் 'டிபார்ட்மெண்ட்' தலைவர். இவ்விருவர்களின்கடமைகளுக்கும்எவ்விஷயத்திலும் வித்தியாசங்களுண்டு. இவைகளை நாம் ஞாபகத்தில் வைத்திருப்போம். நமது மாகாணத்தில் படிப்புசம்பந்தமாய் அநேக குறைகளிருக்கின்றன. இவைகளைத் தீர ஆலோசித்து முற்றிலும் சீராக்குவதே மந்திரியின் முக்கிய பொறுப்பென மதிக்கப்படுகிறது. இச்சென்னை ஸர்வகலாசாலையை அடியுடன் வேறாக மாற்றுவதற்கு, இவர் (Hon. Patro) சில நாட்களுக்குமுன் ஓர் சீர்திருத்த சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார். இவ்விஷயத்தில் கல்விஇலாகா டைரெக்டராயிருக்கும் Hon. லிட்லேஸ், தமது சொந்த அபிப்பிராயங்களையும் இவருக்குத் தெரிவிக்கக்கூடுமே ஒழிய, எவ்விதத்திலும் தலையிடுவதற்கு அதிகாரமில்லை. மந்திரிகளுடைய காரியங்களில் டிபார்ட்மெண்ட் தலைவர்களும் அதிகப்பிரசங்கம் செய்வார்களே யாகில், பிற்பாடு மந்திரிகளுக்கு என்ன கௌரவம்

இருக்கமுடியும்? தவிர, சட்டசபைகளிலுள்ள மெம்பர்களுக்கும் தாங்கள் உத்தரவாதம் அளிப்பது இன்றியமையாததாயிருப்பதால், மந்திரிகள் தமதிஷ்டப்படியே எதையும் சாதிப்பதற்கு சக்தியுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். அதல்லாமல், Hon. விட்லேல்லைப் போலொத்த டிபார்ட்மெண்ட் தலைவர்கள், ஆங்கிலேயர்களாயுமிருப்பதால், Hon. கவர்னரிடம் தமக்கு வாய்த்திருக்கும் சலுகையைக்கொண்டு, மந்திரிகளையும், 'மெம்பர்களை'யும் ஆட்டிவைப்பார்களேயாகில் ராஜ்யத்தில் அமைதியும் ஆனந்தமும் ஒருபோதும் ஜனங்களுக்குக் கிடைக்கமாட்டா. மேலும் இந்தியர்களுக்குரிய ஸ்வய ஆக்ஷி சுதந்திரத்தைத் தாங்கள் பெரும்பாலும் கொடுத்து விட்டதாய் சொல்லி வருகின்ற பிரிடிஷ் அதிகாரிகள் முற்றும் பொய்யர்களாகவே ஆவார்கள்.

இவ்வளவுதூரம் நாம் பேசுவதற்கு இப்போது என்ன நடந்துவிட்டது? மகாத்மா காந்தி சொற்படி பல ஆயிரம் இந்தியர்கள் இத்தருணத்தில் ஜெயிலில் தள்ளுண்டு கிடக்கின்றார்களென்பதை எல்லோரும் செவ்வையாய் அறிந்திருப்பார்கள். இவர்களும், சாமான்யமான கைதிகளைப்போல், பொய் திருட்டு, கொலை முதலான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்கள் அல்ல. தேசாபிமானம் என்றதோர் மகத்தான பாபத்திற்காகவே 20,000 இந்தியர்கள் இப்பொழுது சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகிலும் இவர்கள் மிகவும் அநியாயமாகக் குரூரத்துடன் நடத்தப்படுவதாய்ப் பல வதந்திகள் இதுகாறும் கிளம்பியதுண்டு. மேல்நாடுகளில், நாகரீகம் படைத்த எந்தேதேசத்திலும், இவர்களைப் போன்ற ராஜாங்கக் கைதிகளை, மரியாதையாகத்தான் நடத்துவது வழக்கம். இங்கிலண்டில் இதற்கென ஓர் சட்டமும் ஏற்பட்டிருக்கின்றது. ஆயின், இவ்வுலகத்தின் கண்ணுள்ள விபரீதங்களுக்கெல்லாம் ஒரே இருப்பிடமாய் இருந்துவரும் இவ்வேழை இந்தியாவில், தேசத்தின் மீதிருக்கும் தமதெல்லையற்றதோர் விசுவாசத்தால் கவர்மெண்டாரின் அதிருப்தியை சம்பாதிப்பவர்கள் சாதாரணமான குற்றவாளிகளைப் போலவே நடத்தப்பட்டு வருவதைப் பார்க்க நமது விதியாகிவிட்டது.

கல்கத்தாவில், லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் இவ்விஷயத்தைப் பற்றியே பல கேள்விகள் கேட்கப்பட்டன. பெங்கால் கவர்மெண்டில் ஸர். அப்துர் ரஹீம் என்பவர் ஓர் மெம்பராய் இருந்து வருகின்றார். இவர் இன்று வரையில் அக்கேள்விகளுக்கெல்லாம் அளித்துவந்த பதில்கள் சிறிதேனும் திருப்திகரமாயில்லை. ஜெயில் விவகாரங்கள் சம்பந்தமாக, இவர்தான் மேல் அதிகாரியேயாகிலும், ஒரு விதத்திலும் இந்தியர்களுக்கு க்ஷேமத்தை செய்யக்கூடாமல் இவர் தவித்து வந்திருப்பதாகத் தெரிகின்றது. 'பஸுமதி' யென்ற பெங்காலி பத்திரிகையில் இவ்விஷயமாய், ஸர். அப்துர் ரஹீம் தனது உத்தியோகத்தின் நிமித்தம் பேரானந்தக்கடலில் மூழ்கியிருக்கவில்லையென்று வெளியாயிருப்பதை நாம் உற்று நோக்கலாம். "பெங்கால் கவர்னரது நிர்வாக ஸபையில், தான் சொல்வதெல்லாவற்றையும், ஸர். ஹென்ரி வீலர், ஸர். ஜான் கெர், மகாராஜாதிராஜ் விஜயசந்த், இவர்கள் எப்பொழுதும் முற்றும் எதிர்த்துப்பேசி வருவதாகவே ஸர். அப்துர் ரஹீம் தனது நண்பரொருவரிடத்தில் கூறியதாகக் கேள்விப்படுகிறோம். ராஜாங்கக் கைதிகளைக் கசையடி அடிக்கும் விஷயத்தில் இவர் ஆக்ஷேபித்ததொன்றும் பலிக்கவில்லை. இவருக்குக்கீழ் வேலைபார்த்துவரும் 'டிபார்ட்மெண்ட் தலைவரே' H. E. கவர்னரை நேரில் போய்ப் பார்த்து அவரையும் ஆட்டிவைக்கின்றார்." இவ்வாறு 'பஸுமதி' யென்னும் பேபர் கூறுகின்றது. இன்னும், ஜெயிலதிகாரத்தைத் தனக்கு வேண்டாமென, ஸர். அப்துர் ரஹீம் மறுத்துவிட்டாரென்றும் ஓர் வதந்தியுண்டு. அஃது நிஜமாகவே இருக்கலாம். வெகு சமீபத்தில், இவரும் இவரது டிபார்ட்மெண்டில் தலைவராயிருப்பவரும் (Inspector-General of Prisons), H. E. வைஸராயுடன் பேசுவதற்காக, ஸிம்லாவுக்குச் சென்றிருப்பதாய் மற்றொரு பத்திரிகையில் காண்கின்றோம். தனக்கு முழுவதும் உட்பட்டிருக்குமோர் உத்தியோகஸ்தனை அடக்கமுடியாமல், 'ஒரு கௌன்ஸில் மெம்பர்' கவர்னர்-ஜெனரலின் சிபார்சைத்தேடுவதும் விநோதமாகவே யிருக்கின்றதல்லவா? ஆயினும் ஸர். அப்துர் ரஹீம் தான் என்ன செய்வார்? இந்தியா சீர்திருத்த சட்டம் அவ்வாறு அமைந்திருக்கின்றது. பிரிடிஷ் கவர்மெண்டார் இந்தியர்களுக்குக் கொடுத்தருளியிருக்கும் ஸ்வாதீனமும் இப்படிப்பட்டதே. கௌன்ஸில் மெம்பர்களுக்கும், மந்திரிமார்களுக்கும் இம்மாதிரியாக 'டிபார்ட்மெண்ட் தலைவர்கள்' கிடைப்பார்களேயாகில், இந்தியர்களுக்காக இவர்கள் செய்ய எண்ணியிருக்கும் காரியங்களுக்கெல்லாம், ஸிம்லா கோர்ட்டில் H. E. வைஸ்ராய்க்கு முன்பாகத் தங்கள் கக்ஷியை வாதித்துவரவேண்டும். மேலும் சட்டசபைகளில் நாம் தேர்ந்தெடுத்திருக்கின்ற பிரதிநிதிகளின் கேள்விகளுக்கும் ஒன்றும் உத்தரவாதம் சொல்ல முடியாமல் இப்படித்தான் இவர்கள் திண்டாடுவார்கள். இப்பதவிகளில் இந்தியர்களுக்கென்ன சந்தோஷமிருக்கின்றது. இது புற்றிலும் திரிசங்கு ஸ்வர்க்கம்தான்.

ஓர் கொடையாளி

மூஸபர் நகரிலிருக்கும், லேட் பிகாரிலால் பிரதி வருஷமும் லக்ஷ ரூபாய் வருமானமுள்ள தனது ஐசுவரியம் முழுமையும் தேச நன்மைக்காகவே கல்வி விஷயமாய் தானம் செய்துவிட்டாரெனக் கேட்பதில் அளவற்ற ஆனந்தம் பொங்கிவருகின்றது. 'நாஷனல்' படிப்புக்காகவும், தொழில் படிப்புக்காகவுமே அதைச் செலவழிக்க வேண்டுமென்று அவர் விதித்திருக்கிறார். மேலும் Pandit மதனமோகன மாலவியாவும், ஹகீம் அஜ்மல்கானும், டாக்டர் ஆன்ஸாரியும் அதைப் பாதுகாத்து வருவார்கள். பலவகை தானங்களிலும் வித்தியாதானமே மிகச் சிறந்தது அதன் நிமித்தம் தனது பொருள் எல்லாவற்றையும் விநியோகம் செய்ததற்காக அவருடைய புகழ் என்றைக்கும் அழியாமலிருக்கும். இக்காலத்தில் இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகளில் எங்கும் அளிக்கப்பட்டுவரும் கல்வியானது ஒரு காசுக்கும் பிரயோஜனமற்றதாய் ஆகிவிட்டது. 'படிப்பு' என்றால், பௌருஷத்தையும், ஸத்யத்தையும், தைரியத்தையும் சிறுவர்களுக்கு நாம் புகட்டுவதில்லை. அவர்கள் இவ்வுலகிற் பிறந்திருப்பது பரீக்ஷைகளில் தேறுவதற்கென்றே நாம் இதுகாறும் நினைத்து வந்திருக்கின்றோம். எதிலும் பேசும் திறமையே மிகவும் முக்கியமாகிலும், இக்காலத்திய படிப்பால் பெரும்பான்மையோர் கேவலம் பேச்சுவாயர்களாகவே ஆவதன்றியில், ஒருவருக்கும் பிரதானமாக நாம் பிழைக்கும் வழியைக் கற்பிப்பதில்லை. இதுவே நமது பெருத்த குற்றமாகும். 100இல் 90பேர்கள் வக்கில் தொழிலிலும், கவர்மெண்ட் உத்தியோகத்திலும் சூரர்

களாய் விளங்குகின்றார்கள். அஃதன்றி, வைத்தியம், இஞ்சினீயரிங், 'ஸைன்ஸ்', முதலான சாஸ்திரங்களில் நாம் முழுவதும் அக்கரை பாராட்டி வருவதில்லை. M. A., L. L. D., D. Sc., முதலிய பட்டங்கள் பெற்றுவிடினும், நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கூட சம்பாதிக்க முடியாமல் நம்முள் பலர் திண்டாடுகின்றார்கள். ஆகினும், A., B., C., D., தெரியாதவர்கள்கூட, 'மோடார்' என்னும் தொழில்படிப்பில் பயின்றவர்களாய் மாதம் நூறு ரூபாய் எளிதாகவே கொண்டு வருகின்றனர்.

இப்பூமண்டலத்தில் இந்தியர்களைக் காட்டிலும் பரம ஏழைகள் எங்கேயும் இருந்ததில்லை. இதைத்தான் மகாத்மாகாந்தி செவ்வையாய் அறிந்திருக்கிறார். இந்தியாவில் நாமே பருத்தியை நூற்றுத் துணிகளாக நெய்யவேண்டுமென்றும் அவர் சொல்வதற்கு அதுதான் காரணமாகும். 'நாஷனல்' படிப்பால்தான் நம்முடைய தேசத்தினிடம் பக்தியும், பிரீதியும் நமதுள்ளத்தில் வெள்ளமாகப் பெருகக்கூடும். தவிர, நம் இந்தியாவிற்குள் நாம் பிழைத்திருக்கவேண்டுமென்றால், தொழில் படிப்பும் முக்கியமாய்க் கொண்டாடப் பட்டுவருவது அவசியமாகின்றது. இந்தியாவிலுள்ள தாதுப் பொருள்கள் அளவற்றவையாயிருக்க, அவைகளை நாம் சிறிதும் உபயோகப்படுத்தாமல் ஆங்கிலேயர்களிடம் ஒப்புவித்துவிட்டு நாம் சும்மாயிருப்பது அழகல்ல. நமது துரதிருஷ்டத்தால் நமக்கும் எத்தொழிலிலும் பயிர்ச்சியில்லாததாலேயே வேறு வழியொன்றுமில்லாமல் இத் தமிழ் உலகுக்காக இவ்வாறு மசியையும் வீணாக்குகின்றோம். நம்மை முதலில் காப்பாற்றிக் கொண்டல்லவோ நாம் இத் தமிழ் உலகையும் உயர்த்துதல் முடியும்!! பரம உதாரியாகிய ஸேட் பிகாரிலால் செய்திருப்பதே மிகவும் நேர்த்தியாக இருக்கின்றது. 'நாஷனல்' கல்வியெனில், ஓர் உதாரணமாக நமது வைத்திய சாஸ்திரத்தையும் நாம் முன்னேறச் செய்வோம். மேன்மேலும் நமது நாட்டு நாகரீகத்தையே நாம் முற்றும் கொண்டாடவேண்டும். ஒருவேளை உணவுக்கும் காற்றடிகள்போல கோடிக்கணக்காய் இந்தியாவிலுள்ள ஜனங்கள் பறக்கும்பொழுது, அவர்கள் சோற்றுக்குக்கூட ஒருவழியையும் பண்ணமுடியாதவர்களா இந்தியாவுக்குரிய ஸ்வராஜ்ய சுதந்திரத்தைக்கொண்டு வரப்போகின்றார்கள்? எந்த தேசத்திலும் தொழில்களை அபிவிருத்திசெய்வதே தேசாபிமானிகளின் முதற்கடமையா யிருக்கின்றது. இக்கடமையை மகாத்மா காந்தி ஒருவர்தான் இதுவரையில் அபாரமாகச் செலுத்தியிருக்கிறார். அவரது கைங்கரியத்திற்காகவே இவ்வளவு சிரத்தையுடன் ஸேட் பிகாரிலால் தனது ஐசுவரியம் முழுவதையும் அளித்திருப்பது எல்லையற்றதோர் வியப்பை உண்டாக்குகின்றது.

பார்லிமெண்டில் இந்தியாவைப் பற்றிய விவாதம்

Mr. பென்ஸ்பூர் கண்டித்தல்

சென்ற வாரத் தமிழ் உலகில், Mr. பென்ஸ்பூருடைய பேச்சு முடியவில்லையாகையால், இங்கே நாம் அதைத் திரும்பவும் எழுதுகின்றோம். இந்திய விஷயங்களைப்பற்றி ஒன்றையுமே அறியாத அஞ்ஞான சிரோமணியாரா யிருந்துகொண்டே லார்ட் வின்டர்டன் பிதற்றியவைகளை நமது நேயர்கள் கவனத்துடன் படித்திருப்பார்களென்று நம்புகிறோம். Mr. பென்ஸ்பூரும், கர்னல் வெட்ஜவுட்டும் அவருக்கு எவ்வாறு பதிலளித்தார்களென்பதையும் தெரிவிப்பதற்காகவே மறுபடியும் இவ்விஷயத்தைப் பற்றி இங்கு எழுதலானோம்.

"இந்தியக் கவர்மெண்டார், பூனைகளைப்போல் கண்களை மூடிக்கொள்ளாமல், தமக்கெதிரில் நிற்கின்றவைகளை நன்றாய் அறிந்து, அவைகளுடன் தவக்கமின்றி சமாளிக்கவேண்டும். Mr. காந்தி ஏன் அப்படி நடந்திருக்கிறாரென சற்றும் யோசிக்காமலேயே, அவரை நாம் ஜெயிலில் தள்ளிவிட்டோம். இருக்கும் விஷயத்தை செவ்வையாகத் தெரிந்து கொள்வதற்கு வணக்கமில்லாதவர்கள் ராஜ்யபாரத்தையா வகிக்கப்போகிறார்கள்? பிறரின் மனதை அறிந்துகொள்ள நமக்கும் மனது மாத்திரம் இருந்ததேயாகில், Mr. காந்தி பித்தனல்லவென்றும், மேலும் ஒரு முப்பதுகோடி ஜனங்களுடைய மனப்போக்கையே அவர் காட்டுபவரென்றும் நமதுள்ளத்தில் ஏன் உதிக்கமாட்டாது? அவர் சொல்வதை நாம் முழுவதும் ஏற்றுக்கொள்வதா என்ற கேள்வி ஒருபக்கமிருக்கட்டும். ஆகிலும், திக்கற்று, கதியற்றுத் தவிக்கும் அவ்வேழை இந்தியர்களின் கோரிக்கைகளையே, Mr. காந்தி தீர்த்து வைக்கின்றாரென்பதை நாம் என்றைக்கும் மறக்கலாகாது. முற்றும் விஷமத்திற்காக Mr. காந்தி இம்மாதிரியாகப் பேசிவருகிறாரென்று நாம் எண்ணுவதால், நம்மையே நாம் மௌட்டியத்துடன் ஏமாற்றிக் கொண்டவர்களாவோம். இதில் சந்தேகமேயில்லை. Mr. காந்தியை சிறையில் அடைத்துவிட்டதால், இன்னமும் ஒருவருக்கொருவர் வெறுப்பும் மனஸ்தாபங்களும் முதிர்ந்துவருமே ஒழிய, வேறு எவ்வித நன்மைகளும் உண்டாகமாட்டா. இந்தியாவில் பிரிடிஷாரின் வலிமையைக் காண்பித்தோமென ஜம்பம் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆம், பிரிடிஷ் வலிமைதான்! இந்தியா கவர்மெண்டார் 'இன்ஸால்வென்ஸி' கோர்ட்டில் நிற்கிறார்கள். பிரிடிஷ் ஜவுளி வியாபாரத்திற்கும் இக்கதி நேர்ந்திருக்கின்றது! என்ன பிரிடிஷ் வலிமை! என்ன பிரிடிஷ் வலிமை!"

"இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குமுள்ள வித்தியாசங்கள் எல்லாம் இப்படியே இருக்குமாயின், இந்தியாவும் இங்கிலண்டும் கூடிய சீக்கிரத்திற் பிரிந்து, தனித்தனியேதான் போகவேண்டும். இதைப் பார்க்கிலும் இவ்விரு தேசங்களுக்கும் என்ன பாக்கியக்குறைவு இருக்கின்றது? லார்ட் வின்டர்டனது உபந்நியாசத்தைக்கேட்டு பார்லிமெண்ட் மெம்பர்கள் சிறிதும் மயங்கவேண்டாம். அவர் அப்படித்தான் பேசுவார். ஆகிலும் தற்காலத்தில் இந்தியாவில் நேர்ந்துள்ள விபத்தை நீக்குவதில் ஓர் சிரமமும் எனக்குத் தோன்றவில்லை. தங்கள் வீட்டில் தாமே யஜமானர்களாகவும் இருப்பது முக்கியமென்று இந்தியர்கள் இப்போது நினைத்துவருவதில் அநியாயமென்ன? அவர்களுடைய தேசத்தில் ஸஹஜமாகவே அவர்களுக்குரியதான ஸ்வராஜ்ய சுதந்திரத்தை நாம் அளிக்கும் பரியந்தம், இந்தியாவில் அதிருப்தி எப்பொழுதும் இருக்கும். சில நாட்களுக்குமுன், (இங்கிலண்டில்) 'மான்செஸ்டர் கார்டியன்' என்னும் பிரபலமானதோர் பத்திரிகையில், இந்திய விவகாரங்களைப்பற்றி இந்தியாவிலிருந்து ஒருவர் எழுதிவந்தார். அதில் இவருக்கும் ஓர் பார்ஸி கனவானுக்கும் நடந்த சம்பாஷணை வெளியாய் இருக்கின்றது. இப்பார்ஸி கனவான் நிரம்பவும் பணம் படைத்ததோர் வியாபாரி; Mr. காந்தி பக்கத்திற் சேர்ந்தவரல்ல. இவரே இந்தியாவில் இப்போது காணப்படும் அமைதியின்மைக்குக்

காரணங்களையும் கூறியிருப்பதால், நான் அவைகளை மறுபடியும் இங்கே எடுத்து உரைக்கின்றேன்.

'சுய ஆக்ஷி சுதந்திரம் இன்னும் கிடைக்காததுபற்றி இந்தியர்கள் அனுபவித்துவரும் தாபமே இவ்வமைதியின்மைக்கெல்லாம் மூலஹேதுவாகும். மேலும் இந்தியாவில் இப்பொழுது எங்கும் பரவிவரும் துர்பிக்ஷமும் இந்தியர்களின் அதிருப்தியை மேன்மேலும் விருத்தியாக்குகின்றது. பஞ்சமும் க்ஷாமமும் எவ்வளவுதான் கடுமையாக இருந்தபோதிலும், எங்களுடைய இஷ்டப்படி மாத்திரம் நாங்கள் நடக்கக்கூடுமேயாகில், அவைகளுக்கும் ஒருவாறு பரிகாரம் செய்வதும் முடியும். அஃதல்லாமல், எதிலும் இந்தியா கவர்மெண்டார் பிடிவாதமாய்த் தலையிடுவதால், ஒரு காரியமும் நேராக ஆவதில்லை. எங்கள் தேசத்தில் சுபிக்ஷத்துடன் நாங்கள் வளர்ந்தாலும், எங்களுடைய ஸ்வாதீனத்தையே முதன்மையாக நாடுவோம். இது நிச்சயம்தான்'.

"இவ்வாறாக இப்பார்ஸி கனவான் சொன்னதும், நமது 'மான் செஸ்டர் கார்டியனு'க்கு எழுதியவர் 'இந்தியர்களுக்கு ஸ்வராஜ்யம் கிடைத்தவுடன், அத்தேசத்திலுள்ள ஆங்கிலேயர்களின் பொருளுக்கும் பிராணனுக்கும் தீங்குகளொன்றும் நேரிடாமலிருக்குமோ' வென்று இவரைத் திரும்பவும் கேட்டதற்கு, இவர் பின்வருமாறு பதிலுரைத்தார்.

'பிரிடிஷ் ஜனங்களின் உயிருக்கும், பணத்திற்கும் இந்தியர்களடையும் ஸ்வராஜ்ய சுதந்திரத்தால், 'ஒரு விதத்திலும் மோசம் உண்டாகமாட்டாது. இத்தருணத்தில் இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் எவ்வளவு வருத்தங்கள் இருந்தாலும், இந்தியர்களுக்குரிய ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனம் பிரிடிஷ் அதிகாரிகளால் மறுக்கப்பட்டு வரும்வரையில் தான், ஐரோப்பியர்களின் உடலுக்காகவும் ஐசுவரியத்திற்காகவும் இந்தியாவில் பயப்படுவதற்குக் காரணங்கள் உண்டு. மேலும் அதுபரியந்தமே பிரிடிஷ் போர்வீரர்களும் இந்தியாவிலிருப்பது அவசியமாயிருக்கும். இது நிஜந்தான். ஆகிலும் தங்களுடைய தேசத்தில் இந்தியர்களும் யஜமானர்களாக இருக்குங்கால், ஆங்கிலேயர்களை ரக்ஷிப்பதற்காக பிரிடிஷ் போர்வீரனெவனும் இந்தியாவில் வசிக்கத் தேவையில்லை. அப்போது இந்தியர்கள் பிரிடிஷாரின் பணவுதவியையும், புத்தி நுட்பத்தையும் தாமாகவே நாடிச்செல்வார்கள்.'

'இஃதோர் பார்ஸி வியாபாரியின் அபிப்பிராயம். Mr. காந்தி கக்ஷியைச் சேர்ந்தவனுடையதென்று, நாம் இதை நிராகரித்தல் முடியாதது. * * * * ஸ்வராஜ்ய சம்பந்தமாய், லார்ட் வின்டர்டன் ஒன்றையுமே பேசாமல் தள்ளிவிட்டதற்காக நான் மிகவும் வருத்தமடைகிறேன். இந்தியர்கள் கேட்டுவரும் சுய ஆக்ஷி சுதந்திரம் மிக்கக் கிரமமே. நாம் அவர்களுக்கு ஒன்றும் செய்யாவிடில், இன்னமும் விபரீதங்கள்தான் இந்தியாவில் அதிகமாக சம்பவிக்கும். இந்த க்ஷணத்தில் ஜெயிலில் அடைக்கப் பட்டவர்களெல்லோரும் விடுதலையடைவது இன்றியமையாதது. அவர்களில் பலரை நான் நேரில் பார்த்திருக்கிறேன். லாலா லஜபதிராயைப் போன்றவர்கள், தேசாபிமானம் என்றதோர் குற்றத்திற்காக இவ்வாறு ஜெயிலில் கிடந்து மடிப்பது நமக்கே மானக்கேடாக முடியும். மேலும், ஒரு கான்பரென்ஸில் பிரிடிஷ் மந்திரிகளும், இந்தியாவிலுள்ள எல்லா கக்ஷிகளிலும் முதன்மையாயிருப்பவர்களும் உடனே கூடவேண்டும். * * * * * * ஜாதிபேதமென்ற துன்பம் நமது ராஜ்யத்தை விட்டுத் தொலைந்தாலொழிய, அமைதியின்மை ஒருபோதும் குறையமாட்டாது. * * * * * இந்தியாவில், இந்தியர்கள் பணமென்பதால், சிறிதேனும் மனச்சாட்சியின்றி சைனியத்திற்காக இம்மாதிரி நாம் செலவழிப்பதும் நிறுத்தப்பட வேண்டும். 100இல் 93 பேர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாமலிருக்கும்போது ஜனங்களின் அஞ்ஞானமாகிய இருட்டை சற்றும் நீக்காது, இந்தியா கவர்மெண்டார் இவ்வளவு கடந்த ராணுவச்செலவு செய்து வருவது நாகரீகத்திற்கோர் களங்கமாயிருக்கின்றது. இந்தியாவில் படிப்புக்காகவே செலவழித்தல் முக்கியமாகும். * * * * இன்னும், விரைவுடனே இந்தியாவுக்கு நாம் ஸ்வராஜ்ய சுதந்திரத்தைக்கொடுக்கத் தயாராயிருப்பதையும் தெளிவாகக் காண்பிப்போம். எங்களுடைய லேபர் கக்ஷியார் சம்பந்தப் பட்டவரையில், இந்தியர்களுக்கு இந்த சுதந்திரம் அளிக்கப்படவேண்டுமென்றே பன்முறையும் உண்மையாய்க்கூறியிருக்கின்றோம். என்னதானிருந்தாலும், முற்றிலும் கொடுங்கோன்மையினாலேயே நாம் ஆண்டுவருவதென்பது சாத்தியமில்லை. அயர்லண்டில் நமது எண்ணம் பலிக்காததுபோலவே, இந்தியாவிலும் நம்முடைய கடுமையினால் ஒன்றும் எக்காலத்திலும் கைகூடிவரமாட்டாது. இந்தியர்களின் விஷயமாய் நாம் எல்லையற்றதோர் பொறுப்பைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்பார்லிமெண்டில் இந்தியாவைப்பற்றி நடக்கும் இவ்விவாதத்தை இவ்வளவு மெம்பர்கள், முன்னிலும் ஆயிரமடங்கு அதிகமாய் கவனித்து வருவதை நோக்கின், அப்பொறுப்பு மிக்கப்பெரியதென்றே மெம்பர்கள் எல்லோரும் உணர்ந்திருக்கவேண்டுமென நான் ஊகிக்கின்றேன். இன்னமும் ஒன்றும் தவறிவிடவில்லை. ஆகிலும் ஒருக்கால் நான் நிரம்பவும் அதைரியப்பட்டதும் உண்டு. 1920 டிசம்பரில் இந்தியாவில் எனது சுற்றுப்பிரயாணத்தை முடித்து நான் திரும்பும்போது, பிரிடிஷ் கவர்மெண்டார் எவ்வளவு தாக்ஷிண்யமின்றியும், குரூரமாகவும், கண்மூடித்தனத்துடனும் நடந்திருக்கிறார்களென்பதைப் பார்த்து எனது புத்தியும் பிரமித்து நின்றது. இனிமேலும் இதற்கு ஏதாவது பரிகாரங்களுண்டோ எனவும் அப்போது நான் ஏக்கங்கொண்டேன். ஆயின் இத்தருணத்தில், இன்னும் எல்லாம் முழுகிப்போகவில்லையென்றும், இந்தியாவிலுள்ள கஷ்டங்களுக்கு விமோசனமும் உண்டென்றும் எனது ஆசைகள் என்னை நம்பச் செய்கின்றன. இந்தியாவுக்கு சுய ஆக்ஷி ஸ்வாதீனத்தைக் கொடுப்பதுதான் நம்முடைய தர்மம். மேலும் இந்தியர்களின் மனதை நாம் மீளவும் கவர்வதற்கு இதோ ஒரு சமயமும் வாய்த்திருக்கின்றது. நிஜமாகவே நாமும் சாமர்த்தியசாலிகளாகில், பிரிடிஷ் கவர்மெண்டாரிடம் இப்போது முழுமையும் நம்பிக்கையற்றுக் கிடக்கும் அக்கோடிக்கணக்கான இந்தியர்களை நாம் மீண்டும் திருப்தி செய்து, முன்புபோலவே நம்மிடம் பற்றுதலுடனிருக்க இன்றைக்கும் நாமவசியம் செய்யக்கூடும்."

II

கர்னல் வெஜ்வுட் பிரசங்கம்

Mr. பென்ஸ்பூர் இவ்வாறு பேசி முடித்தபின் கர்னல் வெஜ்வுட் எழுந்திருந்தார். இருவரும் ஒரே லேபர் கக்ஷியைச் சேர்ந்தவர்கள். மேலும் இந்தியர்களின் விஷயத்திலும் இந்த லேபர் கக்ஷியார் அன்புடனும் மரியாதையுடனும் இதுகாறும் நடந்து வந்திருக்கிறார்கள். இந்தியாவுக்கு ஸ்வராஜ்யமளிப்பதே இவர்கள் கொள்கை. அக்கொள்

கையை எப்பொழுதும் லேபர் கக்ஷியார் பிரிடிஷ் பார்லிமெண்டில் தாங்கியே இருக்கின்றார்கள். 1920-ம் வருஷக் கடைசியில் Mr. பென்ஸ்பூரும் கர்னல் வெஜ்வுடும் இந்தியாவுக்கு வந்திருந்தனர். நாக்பூரில் காங்கிரஸ் மகாசபை கூடுங்கால், இவர்கள் அங்கே சென்று, இந்தியர்களின் ஐக்கியத்தையும், ராஜாங்கவிஷயங்களில் அவர்களுக்கிருக்கும் ஆவலையும், மேலும் மகாத்மா காந்தியின் அபாரமான சனுகையையும், சாதுரியத்தையும், அவரது ஒப்புயர்வற்ற மேன்மையையும் பார்த்துத் திகைத்ததுண்டு. அக்காக்ஷியைக் காணக் கொடுத்து வைத்தவர்கள் எல்லோரும் அவ்வருஷத்திற் கூடிய காங்கிரஸ் மகாசபையை மிகவும் புகழ்ந்திருக்கின்றனர். அதைக் கண்ணுற்ற பிறகே, இவ்விருவருக்கும் இந்தியாவைப்பற்றி உயர்வான எண்ணங்கள் உதித்தன. அதற்குமுன் இந்தியர்கள் விஷயமாக என்னதான் சந்தேகங்கள் இருந்திருந்தபோதிலும், அவைகளெல்லாம் முற்றிலும் பறந்தோட அப்பொழுது ஓர் சமயம் வாய்த்தது.

கர்னல் வெஜ்வுட் பேசியதாவது:—

"இந்தியாவுக்குச் சென்ற லேபர்மெம்பர்களை (இப்பார்லிமெண்டில்) இப்போது பேசி முடித்தவர் ஒருவர் (ஸர். W. ஜாயின்ஸன் ஹிக்ஸ்) மிகவும் கண்டித்திருக்கின்றார். அவருடைய கண்டனங்களால் எங்களுக்கு ஒருபாதகமுமில்லை. மேலும் அவைகளைக் கேட்டு நாங்கள் திருப்தியையேயடைகின்றோம். Mr. பென்ஸ்பூர் இந்தியாவிற் பேசியதை லேபர் மெம்பர்கள் எவருமே பேசியிருப்பார்கள். உண்மையாக லேபர் கக்ஷியாரின் நிமித்தம்தான் Mr. பென்ஸ்பூர் இந்தியாவுக்குப் போய்வந்தார். அங்கே அவர் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்களும் லேபர் கக்ஷியார் பன்முறை பகிரங்கமாய் மேற்கொண்டவைகளே. * * * * * Mr. பென்ஸ்பூர் இந்தியாவில் பிரசங்கம் செய்ததில் லேபர் மெம்பர்களின் எண்ணங்களை மாத்திரமே தெரிவித்தாரெனச் சொல்லுவது தவறு. இங்கிலண்டிலுள்ள பிரிடிஷ் பொது ஜனங்களின் இஷ்டத்தையும் Mr. பென்ஸ்பூர் தன்னுடைய உபன்யாசங்களில் முழுமையும் காண்பித்திருக்கிறாரென்று கூறுவதும் நிஜமாகவே பொருந்தும். * * * Mr. பென்ஸ்பூரும், நானும் இந்தியர்கள் விஷயத்தில் என்றைக்கும் மனப்பூர்வமாய் நடந்து வந்திருக்கிறோம். ஒருக்கால், இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கிடைத்தபின், தங்களுடைய பூர்வ சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, இந்தியர்கள், தங்கள் கஷ்ட தசையிலும், இங்கிலண்டில் தங்களுக்கு மிகவும் நெருங்கிய சிநேகிதர்கள் எப்பொழுதும் இருந்திருக்கிறார்களென்பதை நிச்சயமாய் உணர்வார்கள். * * * * இந்தியர் ஒருவருக்கு நான் சமீபத்தில் எழுதியதோர் கடிதம் ஸர். W. ஜாயின்ஸன் ஹிக்ஸ் ஆல் மெம்பர்களுக்குப் படித்துக்காட்டப்பட்டது. அஃது ஒரு அந்தரங்கமான கடிதமே. மேலும் நான் அவ்வாறு எழுதியதில், மிக்க ஆலோசனையுடன், அதையெல்லாம் முற்றிலும் பொருத்தமுள்ளதாகவே இன்றைக்கும் நினைத்துவருகின்றேன். பார்லிமெண்ட் மெம்பர்கள், எங்களைப்போல, இந்தியர்களிடம் பிரியத்துடனும், மட்டுடனும், மரியாதையுடனும் நடக்கக்கூடுமேயாகில், அஃதெவ்வளவோ க்ஷேமகரமாக இருக்கும். பார்லிமெண்ட் மெம்பர்களும் இந்தியர்களுக்குக் கடிதங்கள் எழுதுவதை எங்களிடமிருந்தே கற்றுக்கொள்ளலாம். அதுவும் மிக்க சுபத்தைத்தான் தருவதாகும். ஜெயிலிலடைபட்டிருக்கின்ற டாக்டர் கிச்லுவுக்கும், மற்றும் இந்தியர்கள் இருவருக்கும், நான் எழுதிய கடிதங்கள் வைஸ்ராய் மூலமாகவே அவரவர்களுக்கு அனுப்பப்பட்டன. H. E. கவர்னர் ஜெனரலும் அவைகளை முற்றும் அங்கீகரித்திருக்கிறார்."

ஸர் W. ஜாயின்ஸன் ஹிக்ஸ் "கர்னல் வெஜ்வுட் ஜெயிலிலிருக்கும் அவ்விந்தியர்களுக்கு தான் எழுதினதுமன்றி, அக்கடிதங்களை வைஸ்ராய்க்கும் அனுப்புவித்தார். இவரோ பார்லிமெண்ட் மெம்பர். அப்படிப்பட்ட மெம்பர் ஒருவர் எழுதியதைத், தான் என்ன செய்வதென்று ஒன்றும் புரியாமல் H. E. வைஸ்ராய் மகத்தான சங்கடத்தையே அனுபவித்திருப்பாரல்லவா?"

கர்னல் வெஜ்வுட்: "இல்லவேயில்லை. அவருடைய அனுமதியின் மீதுதான், அவர் அக்கடிதங்களை அம்மூன்று இந்தியர்களுக்கும் அனுப்ப வேண்டுமென நான் பிரார்த்தித்தேன். அவரும் அவைகளை அனுப்பாது இருந்தால், எல்லாம் அத்துடன் நின்றேயிருக்கும். ஆகிலும் இம்மெம்பரை (ஸர் W. ஜாயின்ஸன் ஹிக்ஸை) ப்பார்க்கிலும் அவர் பன்மடங்கு புத்திமானான படியால், என் கடிதங்களை ஒப்புக்கொண்டே, ஜெயிலிலுள்ள இந்தியர்களுக்கும் அவைகளை யனுப்புவித்தார். மேலும் இவர்களுக்குப் பிரிடிஷ் பார்லிமெண்டிலும் ஆப்தர்கள் இருக்கிறார்களெனத் தெரிவது நன்மை பயக்குமென்றே அவர் நினைத்திருக்கக்கூடும். ஆயின் என் கடிதத்தை டாக்டர் கிச்லு வெளியிட்டது வேறுவிஷயம். என்னதானிருந்தாலும், பொது ஜனவிஷயத்தைப் பற்றியே அக்கடிதம் எழுதப்பட்டதாதலால், அதை டாக்டர் கிச்லு வெளிப்படுத்தியதில் ஒரு பிசகுமில்லை—"

ஸர் W. ஜாயின்ஸன் ஹிக்ஸ்: "ஆனால் அதைத் தாங்கள் அந்தரங்கமாய் எழுதவில்லையே?"

கர்னல் வெஜ்வுட்; "இல்லை. ஆயின் மற்ற இந்தியர்களிருவரும் என் கடிதங்களை வெளியாக்கவில்லை. மொத்தத்தில், யார் என்ன சொன்னபோதிலும், Mr. பென்ஸ்பூரும் நானும் இதுவரையில் செய்திருக்கும் காரியத்திற்காக இக்காமன்ஸ் சபையிலுள்ள மெம்பர்கள் எங்களைக் கொண்டாடவே வேண்டும். இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் மனஸ்தாபங்கள் பிரதிதினமும் முற்றிவருகையில், அவர்களுக்குள் எப்படியாவது ஓர் ஸௌஜன்யத்தை உண்டாக்க நாங்களே மிகவும் உழைத்து வருகின்றோம்."

W

கர்னல் வெஜ்வுட் மறுபடியும் பின்வருமாறு பேசத்தொடங்கினார்:—

"இந்திய விவகாரங்கள் சம்பந்தமாக இவ்விவர்த்தத்தில், இப்பொழுதுதான் ஓர் மிகவும் முக்கியமான விஷயத்தைப்பற்றி நான் பேசப்போகிறேன். இக்காலத்தில் இந்தியர்கள் மேன்மேலும் தங்களுக்கு உரித்தான ஸ்வாதீனத்தைப்பெறுவார்களென்பதில் கொஞ்சமும் சந்தேகமேயில்லை. ஒவ்வொரு வருஷமும் மந்திரிகளாயிருக்கும் இந்தியர்களிடம் அதிகாரமும் பொறுப்பும் மிகுதியாகவே கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவிலிருக்கும் இம்பீரியல் லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளியில் இந்திய மெம்பர்களும் வரவு செலவு விஷயமாய்த் தங்களிஷ்டப்படியே நடக்கத் திறமை பெற்றிருக்கிறார்கள். மேலும் இந்தியா கவர்மெண்டாரும் வீண் அகம்பாவங்கொண்டு தங்களுடைய வன்மையைக் காட்டுவதற்காகவே முன்பு போல

இப்போது அடிக்கடி தலையிடுவதும் இல்லை. ஆயின் இதனால் இந்தியாவிலுள்ள பிரிடிஷ் ஜனங்களின் நிலைமையைப்பற்றி நாம் முன்னிலும் கவலைப்படுவதற்குக் காரணங்கள் உண்டாகின்றன. பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களுக்கும், பிரிடிஷ் வியாபாரிகளுக்குமே இந்தியர்கள் அடைந்துவரும் சுதந்திரத்தால் நஷ்டங்கள் பல ஏற்படக்கூடும். இந்தியாவைப்பற்றிய இவ்விவாதத்தில், அத்தேசத்தின்கண் வசிக்கும் பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களின் சம்பந்தமாய்ப் பார்லிமெண்டில் மெம்பர்கள் இவ்வளவு கவலை பாராட்டுவது சகஜமே. இந்தியர்களுடைய ஸ்வாதீனமும் நாளுக்குநாள் விருத்தியாகி வருவதால், ஸிவில் ஸெர்விஸில் வேலை பார்த்துவரும் ஆங்கிலேயர்களுக்கே இஃது ஹானியாக முடியும். * * * * இந்தியாவில் இவர்கள் ஸ்திதி மெத்த கடினமாகத்தான் இருக்கின்றது. ஆகிலும், நான் அங்கே இருக்குங்கால், இந்தியாவுக்காகப் பாடுபடுவதிலேயே கண்ணாயிருந்த உத்தியோகஸ்தர்கள் பலரைப் பார்த்திருக்கிறேன். இந்தியர்களுக்கு சுய ஆக்ஷி சுதந்திரத்தைத்தந்து, இவர்களெல்லோரும் அந்நாட்டைவிட்டு வெளியே வருவதால், இங்கிலண்டுக்கும் என்றும் அழியாத புகழையே இவர்கள் சம்பாதித்து வைப்பார்கள். ஆதியில் நமது முன்னோர்கள் இந்தியாவுக்குப் போகும்பொழுது, அத்தேசம் முற்றும் சீர்குலைந்து கிடந்ததைக் கண்ணுற்றிருக்கவேண்டும். அப்படிப்பட்டதோர் இந்தியாவை முன்னேறச் செய்ததற்காக, அங்கே இதுகாறும் இருந்துவந்த பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களை யார்தான் கொண்டாடமாட்டார்கள்? பிரிடிஷாரின் லோகாபிமானத்திற்கும், பிரிடிஷார் ராஜ்யபாரம் வகித்துவரும் நேர்மைக்கும், பெருமைக்கும், இன்னும் பிரிடிஷ் ஜனங்களுடைய பெருந்தன்மைக்கும், இந்தியாவுக்காக இவர்கள் சாதித்திருப்பதே நிதரிசனமான சாக்ஷியாய் இருக்கின்றது.''

‘‘அதனால்தான் ஸ்வபாவமாகவே, நாம் இன்றையதினம் இந்திய விவகாரங்கள் சம்பந்தமாய்ப் பேசுகையில், இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்கள் விஷயத்திற் பிரதானமாக கவனம் செலுத்துகின்றோம். சற்று நேரத்திற்குமுன் ஓர் மெம்பர் (ஸர். டி. பென்னெட்) செய்ததுபோல, இந்தியா வரவு செலவு திட்டத்தைப்பற்றிப் பேசுவதற்கு இக்காமன்ஸ் சபை இடமல்ல. அஃது இந்தியா கவர்மெண்டாருடைய வேலையே யல்லாது, நம்முடையது இல்லை. * * * * இந்தியாவிலுள்ள பிரிடிஷ் சைனியம் நமது பொறுப்பென்றும், ஆயின் அவர்களுக்காகப் பிடிக்கும் செலவை இந்தியர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் ஒரு மெம்பர் வாதித்தார். இந்தியாவில் ஏறக்குறைய சரிபாதி வரும்படியை சைனியத்தின் நிமித்தமே செலவழிப்பது மகாபாதகமாகும். மேலும், இவ்விஷயத்தில் பணச்செலவை சுமந்துவருபவர்கள் இந்தியர்களே யாதலால், இதற்கும் அவர்களே முழுவதும் யஜமானர்களாவார்கள். பணம் கொடுத்து சதிர் வைப்பவர்களின் சொற்படித்தான் யாரும் ஆடவும் பாடவும் வேண்டுமல்லவா? ஆதலால் இந்தியா வரவு செலவு திட்டத்தைப்பற்றி நாம் இங்கே பேசுவதும் இழுக்கேயாகும். இதைப்போலவே, கோஹத்து விஷயமாயும் நாம் பிரிடிஷ் பார்லிமெண்டில் ஆலோசிப்பது ஒருபோதும் நமது காரியமாகமாட்டாது. இந்தியாவில் அதற்கென்றிருக்கும் கவர்மெண்ட் நிர்வாக சபை மெம்பரைத்தான் இந்தியர்கள் அவ்விஷயத்தில் தூண்டவேண்டும். தங்கள் சட்டசபைகளிலும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாவிட்டால், பிறகு நாம் அதற்கென்ன பண்ணக்கூடும்?''

‘தற்காலத்தில் நாம் எவ்வழியே போகின்றோமென்பதைத்தான் தெளிவாக நாம் அறிந்துகொள்ளவும் வேண்டும். சென்ற பதினாறு வருஷகாலமாய்க் கன்ஸெர்வெடிவ் பக்கத்தைச் சேர்ந்தவர்களில் யாரும் இந்தியா மந்திரி ஸ்தானத்திலிருந்து இப்பார்லிமெண்டில் பிரசங்கம் செய்ததில்லை. சில மாதங்களுக்குமுன் அப்பதவியிலிருந்த Rt. Hon. மாண்டேகூவுக்கு ஒருபோதும் அசைக்க முடியாததோர் பக்கபலம் கிடைப்பது துர்லபமாகவே ஆயிற்று. ஆனால் இப்பொழுதோ இந்தியா மந்திரியாயிருப்பவருக்கு அளவற்ற சலுகை வாய்த்திருப்பது எல்லோரும் நன்கறிந்ததே. Mr. மாண்டேகூ இப்பார்லிமெண்டில் பேசும்பொழுதெல்லாம் அவரைத் தீவிரமாய் ஆமோதித்தவர்கள் அவர் கக்ஷியில் இருக்கவில்லை. மேலும் அவர் தனதிஷ்டப்படியே ஒன்றையும் செய்யக்கூடாமல் தவித்து வந்தார். ஆனால் இப்போது அப்படியில்லை. லார்ட் வின்டர்டன் பேசியது இந்தியர்களுக்குச் சிறிதேனும் ரஸமுள்ளதாக ஆகமாட்டாது; ஆகிலும் இத்தருணத்தில் பிரிடிஷ் கவர்மெண்டார் அவரை முழுவதும் தாங்கியே வருகின்றார்கள். இதுதான் Mr. மாண்டேகூவுக்கும், இப்போது இந்தியா மந்திரி பாரத்தை வகிக்கின்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம். மறுபடியும் இக்காமன்ஸ் சபையில் லார்ட் வின்டர்டன் இந்தியாவைப்பற்றிப் பேசுவதற்குமுன், அவர் அந்த தேசத்திற்கு அவசியமாகப் போய் வருவாரென நான் நம்புகின்றேன். இந்தியாவுக்குச் சென்று, அங்கே கவர்னர்களையும், மற்றும் அநேக பிரபுக்களையும் அவர் நேரில் பார்த்து வந்தாலொழிய, இந்திய விவகாரங்களைப்பற்றி எவ்வித ஞானமும் அவருக்கு இருக்கமாட்டாது. இந்தியாவிலும் இக்காலத்தில் என்ன நடந்து வருகின்றனவென்பதும் அப்பொழுதுதான் நன்றாகத்தெரியும். * * * மேலும், இந்தியாவுக்குப் போய்வருவதால். இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் எவ்வாறு ஓர் பந்தத்தையும் இன்னும் ஒருவருக்கொருவர் விசுவாசத்தையும் உண்டாக்கக் கூடுமென்பதும் அவருக்குப் புலப்படும். * * * இந்த நிமிஷத்தில் 20000 பெயர்கள் இந்தியாவில் ஜெயிலில் அடைபட்டிருப்பதைக் கேட்க வருத்தமுண்டாகின்றது.'',

லார்ட் வின்டர்டன்: “2000 இந்தியர்கள் சிறைவாஸம் செய்கிறார்களென்று தங்களுக்குச் சொன்னது யாரோ?''

கர்னல் வெஜ்வுட்: ‘‘இந்தியாவில் வெளியிடப்படும் பத்திரிகைகளிலிருந்தே நான் இதைத் தெரிந்துகொண்டேன். சமீபத்தில் தான் இந்தியர் ஒருவர் 23000 பெயர்கள் ஜெயிலில் அடைக்கப்பட்டிருக்கிறார்களென்று எழுதியிருக்கின்றார். இந்தியா மந்திரி ஆபீஸிலிருக்கும் உத்தியோகஸ்தர்களிடமிருந்து நாம் ஒரு சமாசாரத்தையுமே பிடுங்க முடியாமல் இருக்கிறது. அவர்களைக் கேட்டாலும், ஒன்றுமே தெரியாதென அவர்கள் சொல்லிவிடுகிறார்கள். மேலும் தேசத்தின் நன்மைக்காக இந்தியாவில் ஜெயிலிலிருப்பவர்களுக்கும், மற்றும் சாமான்யமான குற்றவாளிகளுக்கும் உள்ள பேதங்களொன்றும் தனக்குப் புரியவில்லையென்றே லார்ட் வின்டர்டன் கூறிக் கொண்டிருக்கிறார். * * * இம்மாதிரியாகக் கணக்கற்ற பெயர்களை சிறையில் தள்ளியே, ஓர் கவர்மெண்டார் தமது

ராஜ்யத்தில் எங்கும் அமைதியை நிலைநாட்டி வருகிறார்களென்றால், அதை நமக்குக் கண் குளிரப் பார்க்க சகிக்கவில்லை. * * ஆங்கிலேயர்களிடம் இந்தியர்களுக்குள்ள வெறுப்பும் முற்றி வருவதற்காகவா, இந்தியா கவர்மெண்டார் இவ்வைத்தியத்தைச் செய்து வருகின்றார்கள்? எதற்கும் ஜெயில் என்பது மருந்தல்ல. இப்படியே நாம் இனிமேலும் நடப்போமாகில், இந்தியர்களின் துவேஷமும் முழுவதும் முதிர்ந்துபோகும். தனது மனச்சாட்சிக்குக் கீழ்ப்படிந்தே ஒருவன் ஜெயிலிலும் இறக்கத்துணிந்தால், அவனெப்படிக்குற்றவாளியாவான்? * * * லாலா லஜபதிராயைப் போன்றவர்கள் தாம் மனப் பூர்வமாகவே எதையும் தியாகம் செய்து வந்திருக்கிறார்கள். இங்கிலண்டிலும் ஒரு காலத்தில் இவர்களைப் போலவே பிரிடிஷார் சிறையில் தள்ளப்பட்டுக் கிடந்ததுமுண்டு. * * * *
நாம்இப்பொழுது செய்யக்கூடியது என்ன? Mr. பென்ஸ்பூர் சொன்ன யுக்தியையே நாம் அனுசரிக்க வேண்டும். இந்தியா சம்பந்தமாய் எல்லாவற்றையும் தீர விசாரிப்பதற்காக ஓர் கான்பரென்ஸ் கூடுவது அவசியம். * * * * *
மேலும் சட்டசபைகளின் நிமித்தம் இந்தியாவில் மறுபடியும் (எலெக்ஷன்) நடக்கவேண்டும். Mr. காந்தி கக்ஷியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும், இப்பொழுது முன்புபோலவே தூரத்தில் ஒதுங்கி நிற்காமல், எங்கும் சட்ட சபைகளில் ஸ்தானங்களையபேக்ஷித்து முன்வருவதற்கு இந்தியா கவர்மெண்டார் உதவி புரிவதும் முக்கியமாகும். இத்தருணத்தில் Mr. காந்தியின் மதத்தைவிடாது நிற்கின்றவர்களே அவைகளிலும் ஏராளமாகப் புகுந்து பொறுப்புடனும் நடப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒத்துழையாமையென்னும் பூதத்தை இந்தியாவிலிருந்து துரத்தவேண்டுமாகில், Mr. காந்தியின் பக்தர்கள் எல்லா சட்ட சபைகளிலும் திரண்டு வருவதற்கு இந்தியா கவர்மெண்டார் சகல உபாயங்களையும் பிரயோகம் செய்யட்டும். ஒவ்வொருமாகாணத்திலும் லெஜிஸ் லெடிவ் கௌன்சிலுக்குள் இவர்களும் வருவார்களேயாகில், ஒத்துழையாமை என்ற பேய் தானாகவே விலகும். இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கிடைப்பதற்கும் இது தான் வழியாக இருக்கின்றது. * * * * * * மேலும் இந்தியர்களும் பிரிடிஷாரும் ஒற்றுமையுடன், ஜாதி பேதம் என்பதின்றி, பிரிடிஷ் ஏகாதி பத்தியத்திற்குள் வாழ்ந்து வருவார்கள்."

விவசாய அபிவிருத்தி

சமீபத்தில் பம்பாய் கவர்மெண்டார் ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு மிராசுதாருடைய நிலத்தில் சர்க்கார் செலவில் நூதனமுறைப்படி பரீட்சார்த்த சாகுபடி செய்கிறதென்றும், எரு முதலிய செலவில் ஒரு பாகமாவது மிராசுதார் கொடுக்க வேண்டியதில்லையென்றும் உத்திரவு செய்திருக்கிறார்கள். இப்படிப் பல இடங்களில் செய்வதின் பலனாக அயல் மிராசுதார்கள் நூதன முறைகளின் சௌகரியங்களைத் தெரிந்து கொண்டு அவர்களும் அனுஷ்டிக்க முயலுவார்கள். இவ்விதம் சென்னை கவர்மெண்டார் இந்த இராஜதானியிலும் அப்படியே விவசாய டிபார்ட்மெண்டாரின் உத்தியோகஸ்தர்களைக் கொண்டு பரீட்சார்த்தமாக சில இடங்களில் பலவிதமான எருக்களைக் கொண்டு சாகுபடி செய்யப்போகிறதாகத் தெரியவருகிறது. ஆனால் எருக்களின் கிரயம் முழுதும் மிராசுதார்களே பொறுத்துக் கொள்ள வேண்டியதாம். சிலசமயங்களில் பரீட்சைகள் நிறைவேறாமல் எதிர்பார்த்தபடி பலன் கொடுக்காமலும் போய்விடுகிறது. ஏழையாகிய மிராசுதார்கள் விலையுயர்ந்த ரஸாயன எருக்களை வாங்கி உபயோகப் படுத்த ஐவேஜியுள்ளவர்களா? உழவுசெலவு, கூலி, முதலிய செலவு யாவும் மிராசுதார்கள் கொடுத்தாலும் ரஸாயன எரு உபயோகப்படுத்தினால் அதின் செலவில் 3ல் 1 பாகமாவது சர்க்கார் கொடுத்தால்தான் பல இடங்களில் நூதனமுறைகளை உபயோகிக்க மிராசுதார்களுக்கு ஒருவித அக்கரை உண்டாகும். பரீட்சார்த்தமாக சில ஸ்தலங்களை எருக்களை உபயோகித்தும், சில்ஸ்தலங்களை உபயோகிக்காமலும் ஒற்றுப்பார்ப்பது மட்டும் போதாது. நூதன இரும்புக் கலப்பைகளை கவர்மெண்டு செலவில் வாங்கிக் கொடுத்து உபயோகப்படுத்தும்படி செய்யவேண்டியதும் அவசியம். இப்படி செய்வதால் கவர்மெண்டாருக்கு அதிக செலவு ஆகி விடமாட்டாது. தஞ்சாவூர் ஜில்லாவில் சுமார் 10 இடங்களில் இவ்விதம் ஏற்பாடு செய்யப்போவதாக தெரியவருகிறது. ஒவ்வொரு இடத்திற்கும் சுமார் 30 ரூபாய் ஸாங்ஷன் செய்தால் மொத்தத்திற்கு ஒரு ஜில்லாவுக்கு 300 ரூபாய்க்குமேல் ஆகமாட்டாது. சராசரிக்கு இராஜதானி முழுதும் ரூ 5000க்கு மேல் ஆகமாட்டாது. இது ஒரு டிப்டி டைரெக்டரின் சம்பளம், படி இவைகளில், பாதி கூட ஆகமாட்டாது. ஆனால் இராஜதானி முழுதும் சுமார் 500 இடத்தில் அப்பியசித்து காண்பிப்பதனால் எவ்வளவு பிரயோஜனத்தைக் கொடுக்கும் என்று கவனித்தும் இந்தியாவில் 100க்கு 85பேர் விவசாயிகள் என்பதையும் கண்டு கவர்மெண்டார் உதவிசெய்ய முன் வரவேண்டிய தவசியம்.

புயற் காற்று

(இராமேசன் சட்டகலாசாலையில் பயின்றபின், தன் தகப்பன் வார்த்தைக்கிணங்கவே, சுசீலா என்ற ஓர் பெண்ணை மணக்க நேரிட்டது. விவாக காலத்தில் தன் வதூவை கண்நிமிர்ந்து பாராது, கல்யாணம் முடிந்து பெண்ணுடன் திரும்பவரும்போது, எல்லோரும் ஏறிவந்த ஓடங்கள் புயற்காற்றால் கவிழ்ந்து, இராமேசன்மட்டும் உயிர் தப்பிக் கரை சேர்ந்து, மனம் தெளிந்து, வெளியில் சுற்றிப்பார்க்கையில், மணவாடை உடுத்து நீரில் மூழ்கியதால் அப்போது தான் சுவாஸம் நீங்கிய வோர்பெண்ணைக்கண்டு, அவளை உயிர்ப்பித்து, அவளை தான் மணந்த பெண்ணெனவே நினைத்து, வீட்டுக்கழைத்து வெகுகாலம் அவளுடன் இருந்துவந்தான். ஒருநாள் சுசீலாவென்று அழைக்க, அந்தப் பெண் ஏன் அவ்விதம் தன்னை அழைக்கிறீர்கள் என்று வினவவே, ஏதோ தவறு நடந்துவிட்டது என்று இராமேசன் ஐயமுற்று கவலையடையத் தொடங்கிய விஷயங்கள் அனைத்தும், கடந்த மூன்று 'தமிழ் உலகு' பகுதிகளில் விரிவாய் காணலாம்.)

அந்தச் சிறுமி தன்னுடைய மனைவி அல்ல என்பது இராமேசனுக்குப் புலப்பட்டது; ஆனால் அவள் யார், யாருடைய மனைவி என்று அறிந்து கொள்வது சற்று சிரமமாயிருந்தது.

ஒரு நாள், தந்திரமாய், அவளைப்பார்த்து "கல்யாணத்தில் என்னை முதல் முதல் கண்டதும் என்னைப்பற்றி நீ என்ன நினைத்துக்கொண்டாய்" என்று கேட்டான். அதற்கு, அவள்: "அப்போது நான் உங்களை பார்க்கவேயில்லை, தலை

"குனிந்து கொண்டிருந்தேன், நிமிர்ந்து பார்க்கவில்லை" என்று பதில் சொன்னாள்.

இராமேசன்: "என் பேர் கூட உன் காதில் படவில்லையா?"

அவள்: "கல்யாணத்திற்கு முதல் நாள்தான் நான் உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டேன். எப்படியாவது என்னை கல்யாணம் செய்து கொடுத்துவிடவேண்டும் என்ற அவசரத்தில் என் சிறுதாயார் உங்கள் பேரைக்கூட எனக்குச்சொல்ல மறந்துவிட்டாள்."

இராமேசன்: "அது இருக்கட்டும்; உனக்கு எழுதப்படிக்கத் தெரியுமென்று கேள்விப்பட்டேனே, எங்கே, கொஞ்சம் எழுது பார்ப்போம், எப்படி எழுதுகிறாயென்று, உன் பெயரை?"

இராமேசன் அவளிடம் ஒரு கடிதாசியும் பென்ஸிலும் கொடுத்தான்.

"என் பெயர் கூடவா எழுதத்தெரியாது எனக்கு; அதுவும், என் பெயர் எழுதுவதற்கு எவ்வளவோ இலகு" என்று பெரிய எழுத்தில் "ஸ்ரீமதி கமலா தேவி" என்று எழுதினாள்.

இராமேசன்: "சரி எங்கே, உன் சிற்றப்பன் பெயரை எழுது"

கமலா: "ஸ்ரீயுக்த தாரணீசரண சட்டோபாத்தியாயர்" என்று எழுதினாள்; எழுதிவிட்டு, "ஏதாவது பிசகுயிருக்கிறதா" என்று கேட்டாள் இராமேசனைப் பார்த்து. 'இல்லை; இப்போது உங்கள் ஊர் என்ன என்று எழுது, பார்ப்போம்' எனவே, அவள் "தோபாபுகூர்" என்று எழுதினாள். இவ்விதமான பல பிரயத்தனங்களாலும் தந்திரங்களாலும் இராமேசன் அந்தப் பெண்ணின் பூர்வ விருத்தாந்தங்களைப்பற்றி தெரிந்து கொண்டான்; அப்படி இருந்தும் அவனுக்கு முக்கியமாய்த்தெரியவேண்டிய சமாசாரம் 'அவள் யார் மனைவி, அவள் புருஷன் உயிரோடு இருக்கின்றானா?' என்ற விஷயத்தை அவனால் அறிய முடியவில்லை.

மேல் நடக்கவேண்டிய காரியத்தைப் பற்றி தான் என்ன செய்வது என்று, இராமேசன் யோசிக்கலானான்; அவளுடைய புருஷன் அந்தப் புயற்காற்றில் படகு கவிழ்ந்ததால் முழுகி இறந்திருக்கவேண்டும். அவளுடைய புக்ககத்துக்காரர் யார், எங்கிருக்கிறார்கள் என்று கண்டுபிடித்தாலும், இவளை அவர்களிடம் அனுப்பினால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களோ, என்னமோ? அயல் வீட்டிலிருந்தவள் என்று அவளைத் தள்ளிவிடக்கூடும். மறுபடியும் அவளை அவளுடைய சிற்றப்பன் வீட்டிற்கு அனுப்புவதும் சரியல்ல; அன்னியன் வீட்டில் அவனைத் தன் சொந்தக்கணவன் என்று நினைத்துக் குடியிருந்தவளை ஊரார் ஒப்புவார்களா? அவளுக்கு வேறு உறைவிடம் ஏது, அவள்கதி என்னவாகும்? ஒருவேளை அவளுடைய கணவன் தப்பிப் பிழைத்திருந்தாலுங்கூட அவளைத் திரும்ப அங்கீகரிக்க அவன் மனம் இசையுமா, தைரியம் இருக்குமா? அவளை இப்போது கைவிடின், திக்கு திசை தெரிய முடியாத கடலிலே தனியே கைவிடுவது போலாகுமே! தன்னிடம் அவளை வைத்துக் கொள்வதானால் அவளை மனைவி என்று பாராட்டாமல் வேறு எவ்விதமாய் வைத்துக்கொள்ள முடியும்? வேறு யாரிடமும் ஒப்புவிக்கவும் வழியில்லையே; ஆனால், எப்படி அவளுடன் ஸ்திரீ புருஷர்போல் இருப்பது? அதுவும் கூடாத காரியமாயிற்றே!

அவளைத் தன்னுடைய தர்ம பத்தினியெனக் கருதி தன் மனதிலே கல்பித்துக்கொண்ட அரிய ஆசைகளெல்லாம் அற்றுப்போயின. மன்மதனால் சிறப்பாய வர்ணங்களைக் கலந்து கொடுக்க தன் மனமாகிய பலகையில் எழுதிய அவளுடைய அழகிய பிம்பங்களை யெல்லாம் இப்போது அவன் அழித்துத் துடைக்கவேண்டியதாயிற்று.

ஊரில் இனி வெகுநாள் தாமதித்திருப்பது அசாத்திய மாயிற்று. கல்கத்தாவிற்குப்போனால் அங்கே அந்த ஜனக்கூட்டத்தில் தன்னை ஒருவரும் கவனிக்கமாட்டார்கள். அங்கேதான்போக வேண்டும், அங்கே போன பிறகு இந்த தர்ம சங்கடத்தினின்றும் எப்படி நிவர்த்தித்துக் கொள்வது என்று யோசிக்கலாம். இவ்விதம் நிர்மானித்து கமலாவைக் கூட்டிக்கொண்டு கல்கத்தாவிற்கு வந்தான். அங்கேதான் முன்குடியிருந்த இடத்திற்கு வெகுதூரத்துக்கப்பால் ஒரு ஜாகையை அமர்த்திக் கொண்டான்.

கமலாவுக்கு கல்கத்தாவைப் பார்த்தால் ஒரு அதிசயமாகத் தோன்றிற்று. அவர்கள் புது ஜாகைக்குவந்து அமர்ந்த அன்றைக்கே வாசற் சன்னலில் வந்து உட்கார்ந்து ஓயாது போய்க்கொண்டிருக்கும் ஜனத்திரளைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அவர்கள் வீட்டிற்கு ஒரே வேலைக்காரி; அவளுக்கு கல்கத்தாத் தெருக்கள் புதிதல்ல; இந்தப்பெண் இப்படி ஓயாமல் ஆவலுடன் உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பது என்ன பைத்தியக்காரத்தனம் என்று,

"என்ன, வெறித்து வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்? ஸ்நானம் பண்ணவேண்டாமா, சாப்பிடவேண்டாமா? நாழிகையாகவில்லையா" என்று முணுமுணுத்தாள்.

இந்த வேலைக்காரியை பகல்பொழுதில் வேலை செய்துவிட்டு, சாயங்காலமானதும் வீட்டிற்குப் போய்விடலாம் என்று திட்டம் செய்திருந்தான் இராமேசன். இராத்திரியிலும் அங்கே படுத்துக்கொள்ள சம்மதிக்கும் வேலைக்காரி அகப்படவில்லை.

"இனிமேல் கமலாவுடன் ஒரே அறையில் படுத்துக்கொள்ளக்கூடாது. ஆனால் இவள் எப்படி இந்த அயலூரில் தனியேபடுத்து உறங்குவாள்?" என்று யோசித்தான். இராத்திரி சாப்பாடு ஆனதும் வேலைக்காரி வீட்டிற்குப் போய்விட்டாள். எங்கே படுத்துக்கொள்ளவேண்டுமென்று கமலாவிற்குக் காட்டிவிட்டு "நீ படுத்துக்கொள்; நான் சற்றுநேரம் வாசித்துவிட்டுப் பின்னால் வருகிறேன்" என்றான்.

பிறகு ஒரு புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு படிப்பவன்போல் பாசாங்கு செய்தான். கமலா அலுப்பால் அதிசீக்கிரமே தூங்கிவிட்டாள்.

இப்படி முதல்நாள் இரவைக் கழித்தாய்விட்டது; மறுநாளும் அப்படியே, கமலாவை தனியே படுக்க அனுப்பிவிட்டான்; பகல்பொழுது வெய்யில் அதிகமாக இருந்ததால் படுக்கையறைக்கு வெளியே முற்றத்தில் ஜமக்காளத்தை விரித்துக்கொண்டு இராத்திரி அங்கேயே இருந்துவிடுவதென்று உத்தேசித்தான்; வெகுநேரம் விசிறியால் விசிறிக்கொண்டு யோசனைகள் செய்துகொண்டிருந்தான். கடைசியில், நடுநிசி வேளையில் தன்னையறியாமலே தூங்கிவிட்டான்.

விடியற்காலம் இரண்டு மூன்று மணி சுமாருக்கு அரைத்தூக்கமாக கண்விழித்தபோது, தான் தனியிருக்கவில்லை யாரோ மெதுவாய் தன்னை விசிறிக் கொண்டிருக்கிறாள் என்பது விளங்கிற்று. தூக்கக்கண்ணோடேயே "சுசீலா, நீ தூங்குபோ இப்படி விசிறிக்கொண்டிருக்காதே," என்று, அவளைத்தன் கைகளால் இழுத்துக்கொண்டு காதோடு சொன்னான். இருட்டில் பயந்த கமலா அவன்கைகளைக் கட்டிக்கொண்டே தூங்கினாள்.

விடியற்காலம் இராமேசன் கண் விழித்ததும் திடுக்கிட்டு நடுக்கமடைந்தான். கமலா இன்னும் எழுந்திருக்கவில்லை. அவளுடைய வலது புஜம் இவனுடைய கழுத்தை அணைத்துக் கொண்டிருந்தது. கணவன் என்ற சுதந்திரத்தால் மிகவும் பிரேமையோடு தன் உரிமைசெலுத்தி அவனுடைய மார்பில் தலைவைத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள். இதைப் பார்த்ததும் இராமேசன் கண்களில் நீர் ததும்பியது. எப்படி இவ்வளவு பிரியத்துடன் தன் கழுத்தில் கொடிபோல் சுற்றியிருக்கும் அவளுடைய கரங்களை எடுத்தெறிவது? அவள் இரவில் நடுநிசியில் தன்னை விசிறுவதற்காக தன் படுக்கையை விட்டு வந்தது இராமேசன் ஞாபகத்திற்கு வந்தது.

அதிக துக்கத்தால் பெருமூச்செறிந்து, மெதுவாய் கட்டி அணைத்திருந்த அவளுடைய கைகளினின்றும் விடுவித்துக்கொண்டு எழுந்திருந்தான்.

வெகுநேரம் யோசித்தான் என்ன செய்வது என்று; கடைசியாக பெண்பிள்ளைகள் குடியிருந்து படிக்கும் ஒரு பள்ளிக் கூடத்தில் தற்காலம் அவளைச் சேர்த்து விடுவது, மற்றதை பின்னால் நடக்க நடக்கப் பார்த்துக் கொள்வது என்று தீர்மானித்து, அவளைப் பார்த்து "கமலா, நீ படிக்க வேண்டாமா?" "இது என்ன," என்று கேட்பதைவிட வியக்தமாய் ஆச்சரியத்துடன் கமலா அவனை ஏறிட்டுப்பார்த்தாள்.

இராமேசன் படிப்பால் வரும் நன்மைகளைப் பற்றியும் சுகத்தைப் பற்றியும் படிப்பு எவ்வளவு அவசியம் என்பதைப் பற்றியும் சவிஸ்தாரமாய் உபந்நியாசம் செய்தான். ஆனால் அது அனாவசியமென்று தோன்றும்படி கமலா "சரி, சொல்லிக் கொடுங்கள்" என்றாள்.

"இல்லை, நீ பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டும்."

"பள்ளிக்கூடத்திற்கா, இவ்வளவு வயதான பிறகு" என்றாள் கமலா ஆச்சரியத்துடன்.

இப்படி தனக்கு வயதாயிற்று என்று கமலா சொல்லக்கேட்ட இராமேசன் புன்சிரிப்புடன்,

"உன்னைவிடப் பெரிய பெண்கள்கூடப் பள்ளிக்கூடத்திற்குப் போகிறார்கள்" என்றான்.

இதற்குப் பதில் என்ன சொல்வாள் கமலா? இராமேசன் அவளை ஒரு வண்டியில் ஏற்றி பள்ளிக்கூடத்திற்குக் கூட்டிக்கொண்டு போனான். அது ஒரு பெரிய கட்டிடம். அங்கே இருந்த பள்ளிக்கூடப் பெண்களுக்கு கணக்கு இல்லை போல் தோன்றிற்று. அவர்களில் சிலர் கமலாவைவிட வயதில் சிறியவரும், சிலர் பெரியவருமாயிருந்தனர்.

இராமேசன் கமலாவை தலைமை உபாத்தியாயினியிடம் ஒப்புவித்துவிட்டு புறப்படும் சமயத்தில் கமலாவும் உடன்வருவதாய் புறப்பட்டாள்.

"நீயும் என்ன புறப்படுகிறாய்? நீ இங்கேயே இருக்கவேண்டும்" எனவே, "நீங்களும் இங்கே இருப்பீர்கள் அல்லவா?" என்று வாய்குழறிக் கேட்டாள்.

"கமலா, இல்லை. நான் இங்கே இருக்கக்கூடாது" என்ற பதிலைக்கேட்டவுடன் இராமேசன் கையைப் பிடித்துக்கொண்டு "அப்படியானால் நானும் இங்கே இருக்கமாட்டேன், என்னையும் அழைத்துக் கொண்டு போங்கள்" என்று கெஞ்சினாள்.

மெதுவாய் தனது கையை விடுவித்துக்கொண்டே, 'இது என்ன, கமலா, இந்த அசட்டுத்தனம்,' என்று சற்று கடிந்துபேசினான் இராமேசன்.

இதைக்கேட்டதும் கமலாவால் வாய்திறக்கக்கூடவில்லை. ஸ்தம்பித்து நின்றுவிட்டாள் மந்திரத்தால் கட்டுண்டவள்போல; அவளுடைய முகம் வாடிச் சுருங்கிற்று. நொந்த மனதுடனே இராமேசன் அவளுடைய துக்கத்தைப் பார்க்கக்கூடாதென்று விரைந்து சென்றான்; அப்படியும் அவளுடைய அழகிய சிறு முகத்தில் "இனி யார் தஞ்சம் எனக்கு" என்று பயந்து வருந்தி பரிதபித்த பார்வையை இராமேசனால் மறக்கமுடியவில்லை.

அணுக்களுள் மறைந்த அளவற்ற ஆற்றல்

The measureless Energy hidden in the Atom

ஸர் எர்னெஸ்ட் ரதெர்போர்ட் (Sir Ernest Rutherford) கேம்ப்ரிட்ஜில் செய்துவரும் அத்யத்புதமான ஆராய்ச்சிகளினின்று இரசாயன மூலங்களுள் (Elements) ஒன்றை மற்றொன்றாக மாற்றக்கூடுமென்பது தெரியவருகிறது. ரேடியத்தைப் பற்றிய விந்தைகளில் சில தெரிந்ததும், இயற்கையாகச் சில மூலங்கள் வேறுசில மூலங்களாக மாறுவது வெளியாயிற்று. இவ்வகை விந்தை இயற்கையில் மட்டும் தான் நடந்தேறும், செயற்கையால் இவ்வாறு ஒரு மூலத்தை மற்றொரு மூலமாக மாற்ற முடியாதென்றே அறிவாளர் எண்ணியிருந்தனர். இப்பொழுது ரதெர்போர்ட் ஹீலியம் (Helium) அணுக்களைக் கொண்டு நைட்ரஜன் (Nitrogen), பாஸ்பரஸ் (Phosphorus) முதலியவற்றைத் தாக்கி அவற்றினின்று ஹைட்ரஜன் (Hydrogen) உண்டாக்குகிறார். ஆகவே, இதுவரை நாம் 'மூலங்களை'ப் பற்றி எண்ணியிருந்த எண்ணங்கள் தவறென்பது ஏற்படுகிறது. இயற்கையிலும் செயற்கையாலும் ஒரு மூலம் மற்றொன்றாக மாறுவதால் உண்மையில் அவை மூலங்களல்ல. ஆதலால் பழைய காலங்களில் செம்பைப் பொன்னாகச்செய்யக்கூடுமென்று எண்ணிய எண்ணங்கள் நாம் நினைத்தபடி அவ்வளவு தவறல்லவென்பது தெளிவாகிறது.

இதினினும் விந்தையான இன்னொரு விஷயமும் தெரியவருகிறது. அதாவது சில ஆராய்ச்சிகளில் தாக்கும் அணுக்களின் ஆற்றலை (Energy) விட வெளித் தள்ளப்படும் புதிய அணுக்களின் ஆற்றல் அதிகமாயிருப்பதாகத் தெரியவருகிறது. அணுக்களின் நடுநாபியின் உள் மறைந்து கிடந்த ஆற்றலை இந்தத் தகர்ப்பு வெளிக்கிளப்பிவிடுகிறது என்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது. சாதாரணமாக இரசாயன ஐக்கிய முயக்கத்தில் (Chemical combination) உண்டாகும்—அதாவது விறகு முதலானது எரியும்போது உண்டாகும்—சூட்டைவிட அணுக்களின் நடுநாபியில் மறைந்துள்ள சூடானது அளவில் கோடிக்கணக்குக்கு அதிகம் என்பது அறிவாளர் நன்கறிந்த விஷயம். இது ரேடியம் சக்தி பொருந்திய (Radio active) சில பொருள்கள் சிதைவுறும்போது உண்டாகும் சூட்டின் அளவிலிருந்து கணக்கிட்டுப் பார்த்ததால் தெரியவருகிறது. நுண்ணிய அணுக்களை வைத்துக் கொண்டு ஆராய்ச்சிகள் செய்யும்போது மிகுந்த சூடு உண்டாகிறது. அதிகமாகப் பொருள்களைத் திரட்டி இவ்வாறு செய்தால் என்ன நடக்கும்? ஒருக்கால் அளவுக்கு மிஞ்சிய சூடு உண்டாகி, அடக்கமுடியாது பெரிதாகி, எல்லாவற்றையும் தொலைப்பினும் தொலைக்கும். அல்லது அந்தச்

கூட்டை நாம் அடக்கி யாளக் கூடுமாயினும் கூடும். இவ்வாறு கூட்டைப் பெருக்கவும், அடக்கவும் நம்மால் எளிதில் கூடுமானால் நமது வேலைகளைச் செய்துவைக்க மிகவும் திறமையும் வலியும் வாய்ந்த புதியதொரு சக்தி நமக்குக் கிட்டுகிறது. அதைக்கொண்டு நாம் செய்யக்கூடிய காரியங்களுக்குக் கணக்கில்லை.

நாம் வாயால் கூறும் விஷயங்களெல்லாம் கையால் நடத்தும்போது சரியாய் நடக்குமோ? மேற்கூறிய சௌகரியங்கள் யாவும் அமைக்கக் கூடியனவா? அத் தகைய சக்தியை நாம் உண்மையில் நிச்சயமாய்க் கையாளப் போகிறோமா? என்னும் வினாக்களுக்கெல்லாம் இன்னும் உறுதியாய் ஒன்றும் பதில் சொல்லமுடியாது. ஆயினும் நமக்குத் தெரிந்தவரையில் குறிப்பிட்ட இன்ன காரணத்தால் இவ்வாறெல்லாம் நடக்காது என்றும் ஒருவரும் சொல்லுவதற்கு இடமில்லை. என்ன நடக்கப் போகிறதோ தெரியவில்லை. நடக்க நடக்கப் பார்த்துக் கொள்ளுவோம்.

நரி மகாநாடு

நான் ஒரு நாள் காலை 6மணி சுமாருக்கு சுவேதமலைச் சாரலிலுள்ள ஒரு காட்டின் வழியே செல்லுகையில், அங்கு நரிகள் ஊளையிடும் சப்தம் கேட்டது. சத்தம் வரும் வழியை நோக்கிச் சென்றபொழுது அங்கு நரிகளின் கூட்டம் காணப்பட்டது. அந்நரிகள் பத்திபத்தியாய் இருபக்கங்களிலும் உட்கார்ந்திருந்தன. அக்கூட்டத்தின் தலைப்பில் ஒரு பெரிய கிழ நரி தனது தலையையும் வாலையும் அடிக்கடி அசக்கிக்கொண்டிருந்தது. அதனருகில் ஒரு குள்ளநரி நின்று ஊளையிட்டுக்கொண்டிருந்தது. எனக்கு தவ மகிமையால் விலங்குகளின் பாஷையை யறியும் சக்தியுண்டு. ஆகையால் அங்கு நடந்த விருத்தாந்தத்தை ஒருவாறு கேட்டபடி எழுதுகிறேன்.

குள்ளநரி: சகோதரர்களே! நாம் இதுகாறும் நமக்கு கடவுளாலமைக்கப் பட்ட தொழில்களை நிற்பயமாய் புரிந்து வந்தோம். இப்பொழுது அதற்கு ஏற்பட்டிருக்கும் விபரீதங்களை நீங்கள் யாவரும் அறிந்திருக்கலாம். கொஞ்சகாலமாக சந்திரசைலத்தின் சாரலிலுள்ள காடுகளில் நாம் இதுவரையிலும் அனுபவித்து வந்த சுகத்தைக் கெடுக்கும்பொருட்டு குரூர புத்தியோடு கூடிய சில ஆட்டுக்கடாக்கள் கூடிக் கலகம் செய்துகொண்டிருப்பதும் தெரிந்த விஷயமே. நமக்கு கூர்மையான புத்தியையும் பற்களையும் கொடுத்த பொழுதே கடவுள் காட்டிலுள்ள செடி கொடி முதலிய ஸ்தாவரங்களைக் காப்பாற்றும்படிக் கட்டளையிட்டார். அவைகளுக்கு உபத்திரவத்தை உண்டு பண்ணும் இவ்வாடுகளைக் கண்டித்து வருவது நமது குலதர்மம். இப்படியிருக்க, நாம் அச்சந்திர சயிலத்திலிருக்கலாகாதென்ற கெட்ட எண்ணத்தோடு ஆடுகள் கட்டுப்பாடு செய்யப் போவதாயும், அவர்களுக்கு மூத்தாசையாக நம் ஜாதியாராயிருந்தும் நம்முடைய தர்மத்தை யநுஷ்டிக்காத நாய்களை சேர்த்துக்கொள்வதாகவும் கேழ்விப்படுகிறோம். இந்நாய்களாலேயே அவ்வாட்டுக் கிடாக்களுக்கு துணிவு வந்துவிட்டது என்பது இவ்விடத்திலெல்லோருக்கும் தெரிந்திருக்குமே! நாம் எவ்வளவு குட்டிகளையும் ஆடுகளையும் கொன்று தின்றும் கேழ்வியில்லாமலிருந்தது. இது வரையிலும் நமக்குக் கீழ்படிந்து நடந்தயிவ்வாடுகளுக்கு இப்பொழுது என்ன கேடு வந்தது. ஆடுகள் கொம்பு முளைத்த சில கடாக்களின் பேச்சைக்கேட்டு நாசமாகும் வழியைச் சேர்ந்து விட்டன. இதைப் பற்றி நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து பிரயத்தனம் செய்யாவிட்டால் சந்திர சைலத்தின் வழி நாம்போக முடியாது என்று சொல்லி யுட்கார்ந்தது. உடனே ஒரு பெரிய தடிநரி யொன்று முன் வந்துகத்த ஆரம்பித்தது.

தடி நரி: நண்பர்களே, இப்பொழுது எனது நண்பர் குள்ளநரி சொன்ன வாசகங்களைக் கேட்ட உங்களுக்கு நமக்கு நேர்ந்திருக்கும் அபாயத்தைப் பற்றி யொன்றும் அதிகமாய்ச் சொல்ல வேண்டுவதில்லை யாயினும், ஒரு விஷயம் எனக்குத்தோன்றுகிறது. அதாவது இப்பொழுது இவ்வாடுகள் செய்யும் கலகமானது நமக்கு மாத்திரம் கேட்டை விளைவிக்கும் என்று நினைக்க வேண்டாம். உலகத்திலுள்ள ஸ்தாவரங்களுக் கெல்லாம் நாசத்தை விளைவிக்கும். ஆகையால் இவ்வாடுகளின் முயற்சிகளைக் கெடுக்க சந்திர சயிலத்திலுள்ள ஸ்தாவரங்களை நம் வசமாக்கிக் கொள்வது அவசியம். அவர்களுக்கு நம்மால் வரும் நன்மைகளை நன்றாய் மனதில் படும்படி செய்வதன்றியும் அவர்களோடு ஒற்றுமையாய் வாழ வேண்டும். அதன்றி நம்மவர்களாகிய நாய்கள் ஆடுகளின் பக்கத்திற் சேராத வண்ணம் முயற்சி செய்யவேண்டும். இது விஷயத்தில் நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து முயலாவிட்டால் குடி கெட்டுப்போம். நம் கலகத்தை யொழித்து இவ்வாடுகள் நாய்களின் துணை பெறுவதின் முன்னமே சில கொம்பு கிடாக்களை பிடித்து வந்து விட்டோமானால் அவர்கள் கலகம் ஓய்ந்துவிடும். சுபாவமாய் ஆடுகள் சாந்தமானவைகள். ஏதோ காலவித்தியாசத்தாலும் துஷ்டர்களின் துற்போதனையினாலும் இவ்வாறு கெட்டுவிட்டார்கள். நாம் எல்லோரும் விடாமுயற்சி யுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். (எல்லாம் ஊளையிட்டன)

இவ்வாறு சொல்லித் தடிநரி யுட்கார்ந்தவுடன் அக்கிராசனாதிபதியாயிருந்த கிழநரி எழுந்து ஊளையிட்டதாவது :

கிழநரி: முன் பேசியவர்களால் நமக்கேயன்றி இவ்வுலகுக்கே யேற்பட்டிருக்கும் தீங்கு இன்னதென்பது தெரிந்திருக்கலாம். அதைத் தீர்க்கும் வழிகளும் தடி நரியாரால் விவரமாய்ச் சொல்லப்பட்டன. நாம் இனியவ்வுபாயங்களை காலந்தாழ்க்காமல் அனுஷ்டிக்க வேண்டியது அவசியமாகையால், இப்பொழுதே நம்மவர்களில் இவ்வுபாயங்களில் தேர்ச்சியடைந்த சிலரை இத்தொழிலுக்கென்று நியமித்தல் வேண்டும். அதற்காக ஸ்தாவரங்களைமனம் வேறுபடுத்தி நம்வசப்படுத்த கூழையரையும், கொம்புக்கிடாக்களை யடக்க தடியரையும் நியமிக்கலாமென்று தோன்றுகிறது. இச்சபையாரினது அபிப்பிராயப்படிச் செய்யலாம் என்று சொன்னவுடன் எல்லாரும் அவ்வாறே செய்யலாமென்று ஒப்புக்கொண்டன. உடனே கூழையரும் தடியரும் சபையாருக்கு வந்தனமளித்து மௌனம் கொண்டார்கள். கிழ நரிக்கு வந்தன மளித்தபின் சபை கலைந்துவிட்டது. நானும் திரும்பி வீட்டுக்கு வந்துவிட்டேன்.

திருப்பதி

பிரம்மோத்ஸவ பிரகடனம்.

ஹிமோத்கிரி முதல் கன்னியா குமரிவரையிலும், கீழ் சமுத்திரம் தொட்டு மேல் சமுத்திரமட்டும் உள்ள ஆஸ்திக நாஸ்திக சமஸ்த மதஸ்தரும் கூடும் தருணம் வருஷத்தில் இது ஒன்றே. பதினெண் பாஷை பேசுவோரும் கூடுவார்கள். விளம்பரம் செய்து வியாபார விருத்திசெய்ய இச்சமயம் தவறின், எச்சமயமும் வாய்க்காது.

விவரங்களுக்கு போதுமான தபால் முத்திரைகளுடன் எழுதியனுப்பவும்.

MADRAS ADVERTISINGS,
10, Venkier Street, Madras. E.

சஞ்சீவாஞ்சன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை	வலி	தேள்	கடி	பல்	நோவு
மார்		பாம்புக்		கால்	
முதுகு		பூச்சிக்		காது	
இடுப்பு		விஷக்		கை	

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணா எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

ஆந்த்ர ஆயுர்வேத வைத்திய சாலை

லிமிடெட்.

19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.

டாக்டர். A. லக்ஷ்மிபதி

Founder and Managing Director.

சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி
தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

சுதேசியமானது! உபயோகமானது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல்,
ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில்
D. சுந்தரவரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16.
'தமிழ் உலகு' காரியாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.